# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

## தூது

நற்செய்தி துணுக்குகள்




**நவம்பர் *2023* (மடல் – *23*) செய்தி - *10***

***உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். [சங்கீதம் 128:2]***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 13 |
| வேத வினாக்கள் | 24 |
| கோதுமை மணி | 27 |
| துணுக்குகள் | 29 |
| ஆலய பக்கம் | 31 |

# ஆயர் மடல்

***“உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. அவரே ஐஸ்வரியத்தை சம்பாதிக்கிறதுக்கான பலனை உனக்கு கொடுக்கிறவர்” (உபாகமம் 8:18).***

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நமது குடும்பங்களையும் கண்ணின் மணிபோல் பாதுகாத்து, நமது தேவைகள் அனைத்தையும் சந்தித்து, நமக்கு ஜீவனையும், சுகத்தையும் அருளிச்செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக அறுப்பின் பண்டிகையில் பங்குபெறுவதோடு ஆண்டவர் நமக்கும், நமது குடும்பத்துக்கும் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

உபாகமப் புத்தகம், இஸ்ரவேல் மக்களை கடவுளின் துணையோடு வழி நடத்தி வந்த மாபெரும் தலைவனாகிய மோசே, இஸ்ரவேல் மக்களை விட்டுப் பிரிய இருக்கும் தருவாயில் ஆற்றிய பிரியா விடை அறிவுரையை கூறுகிறது. (Farewell Address) இஸ்ரவேல் மக்கள் சுதந்திர கானான் நாட்டில் சமுக வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த, ஒழுக்கமுள்ள, வாழ்க்கை நெறிமுறைகள் மற்றும் அறநெறி கருத்துக்களை மோசே தொகுத்து கூறுகிறார்.

1.கடவுளின் வார்த்தையைக் கவனிக்க வேண்டும் (Listening to God's word).

2.அதை நினைவில் கொள்ள வேண்டும் (Remembering it).

3.அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் (and Obeying it).

இந்த மூன்று முக்கியமான காரியங்களே இஸ்ரவேல் மக்களின் உயரிய சமுக வாழ்விற்கு மிகவும் அவசியமானவையாக மோசே கூறுகிறார்.

இவை அனைத்தும் இஸ்ரவேல் மக்களுக்கு மட்டுமல்ல, நமது கிறிஸ்தவ வாழ்வுக்கும் அடிப்படைக் கொள்கையாக இருக்கிறது. இஸ்ரவேல் மக்களின் 40 ஆண்டு கால வனாந்திரப் பயணத்தில் ஆண்டவர் அவர்களை ஒரு உயரிய சமூக வாழ்வுக்குத் தயார்படுத்துகிறார். இஸ்ரவேல் மக்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்பதைப், பிற இன மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணமாக அவர்களின் வாழ்க்கை அமைந்திருக்கவேண்டும் என்றும் ஆண்டவர் விரும்புகிறார்.

இஸ்ரவேல் மக்களின் சிறப்பான சமுக வாழ்வுக்கான மூன்று முக்கிய குறிப்புகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

### *1. ஆண்டவரின் கடந்தகால செயலாற்றுதலை நினைப்பூட்டுகிறார் (வசனம் 1-5)*

எகிப்தில் இருந்து விடுதலைபெற்று, கடந்த 40 ஆண்டுகள் வனாந்திரப் பயணத்தில் ஆண்டவர் எப்படி இஸ்ரவேல் மக்களை வழி நடத்தி வந்தார் என்பதை மோசே இங்கு சுட்டிக் காட்டுகிறார். ஆண்டவரின் கட்டளைகளை கடைப்பிடிப்பீர்களோ, மாட்டீர்களோ என்று உங்கள் உள்ளத்தின் சிந்தனைகளை அறிந்து கொள்வதற்காக உங்களைப் பரிசோதிக்கிறார் என்கிறார். (God Tests us) ஒரு தந்தை தன் மகனுக்குக் கற்றுக் கொடுப்பது போல ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். ஒவ்வொரு நாளும் இஸ்ரவேல் மக்கள் கடவுளையே சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் உணவுக்காக மன்னாவைக் கொடுக்கிறார். அதோடு ஆண்டவரின் அன்பு நிறைந்தப் பராமரிப்பையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த 40 ஆண்டுகால வனாந்திரப் பயணத்தில் அவர்களின் வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, பாலை நிலப் பயணத்தில் அவர்கள் கால்கள் வீங்கவும் இல்லை. அந்த அளவுக்கு ஆண்டவர் தம் மக்களை பராமரிக்கிறார் என்கிறார், தன்னால் தெரிந்து

கொள்ளப்பட்ட மக்கள் நல்லொழுக்கத்திலும் உயரிய சமூக வாழ்விலும் சிறந்திருக்கவேண்டுமென்று அவர்களைப் பயிற்றுவிக்கிறார் என்கிறார்.

***2. ஆண்டவரின் நிகழ்கால ஆசீர்வாதத்தை நினைப்பூட்டுகிறார் (வசனம் 6-9)***

பாலைநிலப் பயணத்தில் ஆண்டவரின் அற்புதமான செயலாற்றலை நினைவுப்படுத்திய மோசே, ஆண்டவர் வாக்களித்த நாட்டின் ஆசீர்வாதத்தையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். மக்களின் வாழ்வாதாரமாக இருக்கின்ற தண்ணீர் வளத்தை முதன் முதலில் குறிப்பிடுகிறார். கீழ் நாடுகளில் தண்ணீர் மிகவும் மதிப்புமிக்கது என்பதால் ஆறுகளும் ஊற்றுகளும். ஏரிகளும் நிறைந்திருக்கிற தேசம். (வச. 7) அதோடு வருஷத்தின் முன்மாரியையும் பின்மாரியையும் பெயப்பண்ணுவேன் என்கிறார். அவர்கள் உண்பதற்கு ஒன்றும் குறைவு இல்லாததும், எல்லா இயற்கை வளங்களும், தாதுக்களும் கொண்ட தேசமாக ஆண்டவர் கொடுக்கிறார் என்பதை இஸ்ரவேல் மக்களுக்கு நினைப்பூட்டுகிறார்.

ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கின்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் நினைத்துப் பார்ப்போம். முகவரி இல்லாத நமக்கு முகவரி கொடுத்து, நமது எல்லாத் தேவைகளையும் தாராளமாகக் கொடுத்து, ஆசீர்வதித்த தேவனை நாம் நன்றியோடு ஸ்தோத்தரிக்க அழைக்கப் பட்டிருக்கிறோம்.

***3. ஆண்டவரின் அன்புக்கு ஈடாக எதிர்காலப் பங்கை நினைப்பூட்டுகிறார் (வசனம் 10-18)***

இஸ்ரவேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையில் தமது பங்கைத் தாராளமாகவும் மனப்பூர்வமாகவும் நிறைவேற்றிய ஆண்டவர், இஸ்ரவேல் மக்களும் தங்களது பங்கை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். பல வேளைகளில் நமது தேவைகள் நிறைவேறிய உடனே நமக்கு உதவி செய்த மனிதர்களை மறக்கின்ற மனநிலையிலே மனிதன் இருக்கிறான். ஆனால் ஆண்டவர் மனிதனிடம் நன்றியையும், கற்பனைகளுக்குக் கீழ்படிவதை மட்டுமே எதிர்பார்க்கிறார். (வச 10) ஏனெனில் கற்பனைகளை கைக்கொள்கிறவன் மட்டுமே அவரிடம் அன்பு செலுத்துகிறான் என்பதையும் மோசே நினைப்பூட்டுகிறார்.

ஆண்டவர் நமக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை அருளிச் செய்திருக்கிறார். தாழ்வில் இருந்த நம்மை உன்னதமான உயர்வான நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார். நாம் எப்பொழுதும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாகவும், அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்கிறவர்களாகவும் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்ற வாய்ப்பை அறுப்பின் பண்டிகை வழியாகப் பெற்று இருக்கிறோம். ஆண்டவர் செய்த நன்மைகளை நினைத்து, நமது நன்றிக் காணிக்கைகளை ஆண்டவரின் சமூகத்தில் படைத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
Rev. Dr. A. Samuel

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நமது குடும்பத்தையும் கண்ணின் மணியைப் போல பாதுகாத்து வழி நடத்தியதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பத்தினருக்கும் ஆசிர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக

***கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் [சங்கீதம் 128:1,2].***

127 மற்றும் 128-ஆம் சங்கீதங்கள் மனிதனின் சமூக வாழ்வை பற்றியது. குறிப்பாக, குடும்ப வாழ்வை குறித்து நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நமது சமூக அமைப்பில் ஆண்டவர் வேலையையும், உழைப்பை வைத்திருக்கிறார். மனிதன் உழைத்து வாழ வேண்டும் என்பது கடவுளின் நியதி. ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்தில் ஆண்டவர் கொண்டு வந்து வைத்து, அவர்களை வேலை செய்ய கட்டளையிடுகிறார். (ஆதியாகமம் 2:15) இவ்வுலகத்தில் பாவம் தோன்றுவதற்கு முன்னதாகவே மனிதனுக்கு வேலையையும் உழைப்பையும் ஆண்டவர் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். எனவே வேலை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது. படைப்பின் தொடக்கம் முதல் மனிதன் உழைத்து வாழ வேண்டும் என்பதுதான் ஆண்டவருடைய நீதியாக இருக்கிறது.

ஆண்டவரின் கட்டளைகளும் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆறு நாள் நீ வேலை செய்ய வேண்டும் என்று ஆண்டவர் கட்டளை கொடுக்கிறார். ஆனால், நாம் செய்கின்ற வேலை நமக்கு கடினமாக ஆகிவிட்டது. எப்பொழுது மனிதன் பாவம் செய்தானோ அப்பொழுது நம்முடைய வேலை கடினமாக மாறிவிட்டது (ஆதியாகமம் 3:17,19).

இங்கு சங்கீதக்காரன் இவ்வுலகச் சூழலில், எப்படி நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் ஆசீர்வாதமாக இருக்க முடியும் என்பதை சுட்டிக்காட்டுகிறான். ஆசீர்வாதத்திற்கு சங்கீதக்காரன் பயன்படுத்துகின்ற வார்த்தை பாக்கியவான் அல்லது பேறுபெற்றோர் என்கிறான். யார் பேறுபெற்றவன்? ஆண்டவருக்கு பயந்து அவர் வழியில் நடக்கிறவன் பாக்கியவான் அல்லது பேறுபெற்றவன் என்கிறார். இறையச்சம் அல்லது கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது கடவுள் நமது அதிகாரி, நாம் அவருடைய அடிமைகள் என்பதினால் எழுகின்ற பயம் அல்ல. ஒரு தந்தைக்கும் மகனுக்கும், மகளுக்கும் இடையே இருக்கின்ற அன்பு கலந்த மரியாதையை இறையச்சம் குறிக்கிறது. (யோவான் 14:21) பயம் என்பது கடவுள் மீது நாம் வைத்திருக்கின்ற மரியாதை கலந்த அன்பையே சுட்டிக் காட்டுகிறது. ஜான் பிலிப்ஸ் என்கின்ற அறிஞர் சொல்கிறார், கர்த்தரை நமது வாழ்வின் மையமாக வைப்பது இறையச்சம் என்கிறார். அவர் வழிகளில் நடப்பது என்பது, தினந்தோறும் கடவுளின் கற்பனைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதையே காட்டுகிறது. கடவுளை நமது வாழ்வின் மையமாக வைத்து, அவரின் கற்பனைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதே இறையச்சம்.

1. ***கடவுளுக்கு பயப்படுகிற மனிதனின் தனிப்பட்ட வாழ்வில் ஆசிர்வாதம்:***

உன் கைகளின் பிரயாசத்தை சாப்பிடுவாய் உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் (சங்கீதம் 128:2) உழைப்பையும் வேலையும் ஆண்டவே நமக்கு தந்திருக்கிறார் என்பதினால், அது ஆசீர்வாதத்திற்கு அடையாளமாகவே இருக்கிறது. கடவுள் தந்த வேலையின் பிரயாசத்தை நாம் உண்ண வேண்டுமென்றால் அதில் கடவுளுடைய பொறுப்பும் அடங்கி இருக்கிறது அவரே நமக்கு வேலை செய்வதற்கான திறமையை கொடுக்கிறார். நம்முடைய பிரயாசத்திலே வெற்றியை கொடுப்பதும் ஆண்டவரே. (ஆதியாகமம் 39:2) கைகளின் பிரயாசத்தை உண்ணுகின்ற ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார்.

2. ***கடவுளுக்கு பயப்படுகிற மணிதனின் குடும்ப வாழ்வில் ஆசீர்வாதம்.***

தனிப்பட்ட வாழ்வில் ஆசீர்வாதத்தைக் கொடுத்த ஆண்டவர், நமது குடும்ப வாழ்விலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். குடும்ப உறவு என்பது இறைவன் கொடுத்த கொடை. நல்ல சமுதாயத்திற்கு அடிப்படையாக இருப்பது நல்ல குடும்பம். இந்த குடும்ப உறவிலே கணவன் மனைவி பிள்ளைகளுடைய பங்களிப்பானது முக்கியமானது. கடவுளுக்கு பயந்து வாழுகின்ற குடும்பத்திலே மனைவியும் பிள்ளைகளும் எப்படி இருப்பார்கள் என்பதற்கு இரண்டு உருவகத்தை முன்வைக்கிறார். ய. திராட்சை செடி: டி. ஒலிவ மரக்கன்று: இரண்டுமே இஸ்ரவேல் மக்களின் வாழ்வோடு நெருங்கியத் தொடர்பு கொண்டது. கனிதரும் திராட்சை செடி என்பது அவனின் குடும்ப வாழ்விலே மக்கள் செல்வத்திற்கு குறைவிராது என்றும் ஒலிவ மர கன்று என்பது அவனின் பிள்ளைகள் வளமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வார்கள் என்பதை காட்டுகிறது. கடவுளுக்கு பயந்து அவர் வழியில் நடக்கிறவர்கள் குடும்பத்தை ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார்.

3. ***கடவுளுக்கு பயந்து வாழுகின்ற மனிதனின் சமூக வாழ்வில் ஆசிர்வாதம்:***

சமூக வாழ்வில் ஆண்டவர் சமாதானத்தை கொடுக்கிறார். (சங்கீதம் 128:6) சமாதான வாழ்வு இறைவன் கொடுக்கின்ற கொடை. மகிழ்வும் மனநிறைவும் ஆண்டவர் கொடுக்கின்ற பரிசு. தமக்குப் பயப்படுகிற மக்களுக்கு இந்த சமாதானத்தை ஆண்டவர் கொடுக்கிறார். எவ்வளவு நெருக்கடியான சூழல் ஏற்பட்டாலும் சமாதானத்தை ஆண்டவர் சமூக வாழ்வில் நமக்கு கொடுக்கிறார். ஆண்டவருக்குப் பயப்படுகின்ற ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஆண்டவர் சமாதானத்தையும் மனநிறைவையும் மகிழ்ச்சியின் வாழ்வையும் கொடுக்க வல்லவராக இருக்கிறார். அவருக்கு பயந்து அவருடைய கற்பனைக்கு கீழ்ப்படிந்து வாழ்வோம் ஆண்டவருடைய ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

கர்த்தர் உங்களையும் உங்களுடைய குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாரா!

***மீட்பரின் பணியில்***
***Mrs. S. ஜெபா சாமுவேல்***
**ஆயரம்மா**

## கிறிஸ்தவ ஈகை

**"அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" (1பேது.4:10).**

*கிறிஸ்துவுக்குள்ளான கிறிஸ்தவ வாழ்வு தனித்து வாழும் வாழ்வு அல்ல! கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு கூட்டு வாழ்க்கை. அங்கே சந்தோஷமும் இருக்கும், சஞ்சலமும் இருக்கும். இல்லையானால் வாழ்வே சிறப்பாயிராது அல்லவா! ஆனால் என்ன சஞ்சலங்கள் நேரிட்டாலும், தேவனுக்குள்ளான மகிழ்ச்சி நிறைவாகவே இருக்கும். இந்தக் கூட்டு வாழ்வுக்குத்தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். கண்களுக்குத் தெரியாத அவருடன் நாம் உறவுகொண்டு, அவரோடு நாம் வாழுகிறோம் என்பதற்கு ஒரே சாட்சி, கண்களுக்குத் தெரிகின்ற பிற மக்களோடு நாம் தேவ அன்பைப் பகிர்ந்துகொண்டு வாழுவதே ஒன்றேயாகும். இந்த வாழ்வுக்குத்தான் தேவனுடைய வார்த்தை நமக்கு அழைப்புவிடுத்திருக்கிறது.*

*விசுவாச வாழ்க்கையிலே கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் எவைகளை எல்லாம் எப்படி பகிர்ந்து கொள்ள முடியும் என்பதை வேதத்தின் அடிப்படையில் சில குறிப்புகளைக்கொண்டு பார்க்கலாம்.*

### தேவ அன்பை பகிர்ந்தளித்தல்

*தேவன் அன்பாகவே இருக்கிறார். இயேசு கிறிஸ்துவும் தமது அன்பின் மிகுதியினிமித்தமாகவே தம்மையே நமக்காக சிலுவையில் அர்ப்பணித்தார். (எபேசியர் 5:2; கலாத்தியர் 2:20). இறைவனின் அன்பை உலகிற்குக் கொண்டுவந்தவரும் அதை செயலில் காட்டியவரும் இயேசுதான். எப்பொழுது இந்த தெய்வீக அன்பு நமக்குள் வருகிறதோ, அன்றுமுதல் இந்த தெய்வீகமான பரிசுத்த அன்பு நம்மிலிருந்து மற்றவர்களுக்கு பாய்ந்து செல்லும்.*

*தேவ மனிதரான சாது சுந்தர்சிங் அவர்கள், திபெத் தேசத்தில் ஊழியம் செய்தபோது, பனிபடிந்த பிரதேசத்தில் வெறுங்கால்களுடன் நடந்து செல்வதால் கற்களும் முட்களும் அவரது பாதங்களைக் கிழித்தது இரத்தம் வழியக் காணப்பட்டதாம். ஓரிடத்தில் அவர் உட்கார்ந்து தன் புண்களைக் கட்ட ஆரம்பித்தார். அவ்வழியே வந்த ஒருவர், ஐயா, 'இரத்தம் கசியும் வெறுங்கால்களால் மலையின்மீது இவ்வாறு பயணம் செய்வது ஏன்' என்று கேட்டாராம். அதற்கு சாது சுந்தர்சிங் ஐயா அவர்கள் "கல்வாரி சிலுவையிலே தமது கால்களில் இரத்தம் சிந்தின இயேசுவை மக்களுக்குக் காண்பிப்பதற்காக இவ்விதமாகச் செய்கிறேன்" என்று பதிலுரைத்தாரம்.*

நமது சுயஅன்பினால் நாம் ஆத்தும தாகம் கொள்வதில்லை. கிறிஸ்துவின் அன்பு நம்மை நிரப்புகையில், அந்த அன்பைப் பகிராமல் இருக்கமுடியாது. கல்வாரி அன்பினால் நிரப்பப்பட்டவர்களாக, தேவ அன்பை எங்கும் எடுத்துச் செல்லப் பாரப்படுகிறவர்களாக நாம் காணப்படவேண்டும். அந்த அன்பின் ஏவுதலால் அருட்பணி செய்யவும், சுவிஷேசம் அறிவிக்கவும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**ஈவுகளை பகிர்ந்தளித்தல் :**

இரட்சிப்பு தேவன் அருளும் ஈவு, மட்டுமல்ல நன்மையாக நாம் பெற்றுக்கொள்கிற எல்லா உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களும் பரத்திலிருந்து நமக்கு கொடுக்கப்படுகிற ஈவு என்று வேதம் சொல்லுகிறது.

"பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்", என்று ஏசாயா 58 : 7-ல் வாசிக்கிறோம். பகிர்ந்து கொடுப்பதும், உதவி செய்வதும் தேவன் அன்பின் பரிமாணங்கள். ஆகவே தான் "இந்த சிறியரில் ஒருவனுக்கு செய்ததை நீங்கள் எனக்கே செய்தீர்கள்" என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். ஆதி விசுவாசிகளின் மனப்பான்மை, எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் மாதிரியாக இருக்கிறது: ""அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவா யிருந்ததில்லலை" என்று எழுதப்பட்டு இருக்கிறது.

தன்னைப்போல பிறனையும் நேசிக்கிற அன்பு மற்றும், அயலானை நேசிக்கிற அன்பு என்று கிறிஸ்துவானவர் கற்றுத்தந்த பாடங்கள் அனைத்தும் , ஒருவருக்கொருவர் பாரம் கொண்டு உதவி செய்து, தாங்கும் பொது தன வெளிப்படுகிறது.

**துக்கங்களை பகிர்ந்து கொள்ளுதல்**

'அழுகிறவர்களுடனே அழுங்கள்' என்று (ரோமர் 12:15) -ல் வாசிக்கிறோம். இயேசு மக்களின் துன்பங்களை கண்டு பரிதாபப் பட்டு அவர்களுக்கு உதவி செய்தார் என்று பார்க்கிறோம். நல்ல சமாரியன் உவமையை ஆண்டவர் நமக்கு வேதனையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கற்றுத்தருவதற்காகவே சொன்னார். யோபுவின் நண்பர்கள் அவனை சந்தித்து துக்கத்தை பகிர்ந்து கொள்ள முயற்சித்தார்கள். மற்றவர்களுக்காக துக்கப்படவும், திறப்பிலே நின்று ஜெபிக்கவும் ஆண்டவர் தேவ பிள்ளைகளை தெரிந்து கொள்ளுகிறார். தேவனுடைய அன்பை நாம் பெற்றவர்களானால், அந்த மனதுருக்கத்தையும் அன்பையும் நிச்சயமாக மற்றவர்களுக்கும் காண்பிக்க வேண்டும், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் , அவர்களுடைய கஷ்டத்திலே பங்கு பெற்று , நம்மால் இயன்ற உதவியை செய்கிறவர்களாக நாம் காணப்பட வேண்டும் .

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" (2 கொரிந்தியர் 5:14) என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார். தேவனுடைய அபிஷேகத்தை பெற்றிருக்கிற நாம், இன்றைக்கு தேவை உள்ளவர்களிடம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நம்மிடம் உள்ளதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் அன்பு நமக்குள் இருக்க வேண்டும். கிறிஸ்துவும் அவ்வாறே நம்மீது அன்பு காண்பித்தார். நம்மை நாம் நேசிக்கிறதுபோல பிறனையும் நேசிக்க வேண்டும் என்ற மனப்பான்மையும் அன்பும் நமக்கில்லை என்றால் இப்பொழுதே நம்மை ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணிப்போம். ஆண்டவர் தாமே தம்முடைய தெய்வீக அன்பினால் நம்மை நிரப்பி அந்த நல்ல உக்கிரணத்துவதை நிறைவேற்றும் தம்முடைய உண்மையும் உத்தமமும் உள்ள ஊழியக்காரர்களாக நம்மை மாற்றுவராக,..ஆமென்.

*உன்னை நீ நேசிப்பது போல் பிறனை நேசி*
*தன்னையே நமக்கு தந்த கர்த்தர் சொன்னது ..!*
*உலகோர்க்கு செய்கின்ற அன்பு ஒன்று தான் - நீங்கள்*
*இறைவனுக்கு சீஷர் என்று விளங்கச் செய்வது ...!! (மாற்கு 12 : 31,33, யோவா 13:35)*

*அன்பின் ஆழம் அகலம் நீளம் அறிந்து கொள்ளுவோம்*
*அன்பினாலே அயலகர்க்கு நன்மை செய்குவோம் ..!*
*கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவினால்...*
*கிருபை அன்பை உலகம் எங்கும் உரக்க சொல்லுவோம் ..!! (எபே 3:18,)*

*ஒருவருக்காய் ஒருவர் கூடி ஜெபித்திடல் வேண்டும்*
*ஒருவரோடு ஒருவர் தயை அன்பும் வேண்டும் ..!!*
*ஒருவர் பாரம் ஒருவர் சுமக்கும் பாத்தியம் வேண்டும் ..!*
*ஒருவர் குறைகள் ஒருவர் தாங்கும் பாக்கியம் வேண்டும் ...!!! (எபே 4:32 கொலோ 3:12)*

*பெற்ற வரம் கிருபை ஈவும் பகிர்ந்து கொள்ளுவோம் ..*
*மற்றவர்க்கு நன்மை யாவும் மகிழ்ந்து செய்குவோம் ..!!*
*சிறியவர்க்கு செய்தவை நீர் எனக்கே செய்தீர் .. -என்று*
*வருகையிலே நாதர் சொல்லும் மகிழ்வை பெறுவோம் ..!!! (I-பேதுரு 4:10, மத் 25:40)*


*கிறிஸ்துவில் அன்புடன்,*
**Jayachandra Raja**

## ஈகைக்கு வேண்டிய ஆயத்தம்



உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு. உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே (லூக்கா 6:30). அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2கொரி. 9:7). இப்படியாக பிறருக்கு உதவுவது பற்றியும், ஆண்டவருக்கு கொடுப்பது பற்றியும் அநேக வசனங்களை வேதாகமத்தில் காணமுடியும். தங்களுடைய ஈகையினிமித்தம் தேவனைப் பிரியப்படுத்திய ஒரு சிலரைக் குறித்து சற்று சிந்திப்போம்.

**ஆபேல்**



ஆபேலையும் அவன் காணிக்கையையும் தேவன் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் தேவன் அங்கிகரிக்கவில்லை (ஆதி.4:4,5). இந்த வசனங்களில் காணிக்கைக்கு முன்பு ஆபேல், காயீனின் பெயர் வருகிறது. அதாவது ஆபேலின் காணிக்கையை அங்கிகரிக்கும் முன், தேவன் ஆபேலின் வாழ்க்கையை அங்கிகரித்திருந்தார். அப்படியானால் நிச்சயமாக ஆபேல் தேவனுக்கு பயந்து வாழ்ந்திருக்க வேண்டும். அவன் தேவனை மாத்திரமே மாதிரியாக வைத்திருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் பெற்றோர் பாவம் செய்து, உலகத்தை கறைபடுத்தி விட்டனர். காணிக்கை செலுத்துமுன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்னர் செலுத்த வேண்டும் என்று மத்தேயு 5:23,24 கூறுகிறது. இவ்வசனத்தின்படி, ஒருவேளை காயீன் ஆபேலுக்கு ஒரு நல்ல அன்பான சகோதரனாக இல்லாதிருந்திருக்கலாம். காயீனின் வாழ்க்கையை தேவன் அங்கிகரிக்கவில்லை. அவன் ஒரு மாதிரியான சகோதரனாக ஆபேலுக்கு இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே ஆபேல் தேவனை மட்டுமே சார்ந்து இருந்திருக்க வேண்டும். ஒருவரின் வழிகாட்டுதலும் இல்லாமல் எப்படியாக தேவனுக்கு பிரியமாய் ஆபேலால் வாழ முடிந்தது என்பது விசித்திரமாகவே இருக்கிறது.

**எசேக்கியேல்**

எசேக்கியேல் பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரன் (எசே.1:3). பிறப்பால் ஆசாரியனாய் இருந்த அவரை தேவன் ஒரு தீர்க்கதரிசியாக அழைத்தார். கேபார் நதியண்டை சிறைபட்டவர்கள் மத்தியில் வாழும்போது தேவனுடைய தரிசனத்தைப் பெற்றார். சிறையிருப்பில் இருந்தவர்களுக்கு தேவனுடைய செய்தியை அளித்தவர்

எசேக்கியேல். தான் கூறுவதை மக்கள் கேட்கமாட்டார்களென்று அறிந்திருந்தும் தன்னுடைய தீர்க்கதரிசன பணியை முழு கீழ்ப்படிதலோடு செய்தார். தன் வாழ்க்கையையே காணிக்கையாகக் கொடுத்து தேவனைப் பிரியப்படுத்திய தீர்க்கதரிசி எசேக்கியேல். அநேக உவமைகள் மூலம் தேவன் அவரை தீர்க்கதரிசனம் உரைக்க செய்தார். யோயாக்கீன் மன்னனுடன் பாபிலோனுக்கு அனுப்பப்பட்டார். மக்களுக்கு வரப்போகும் தீங்கை அறிவிக்க எசேக்கியேலின் மனைவியை ஆண்டவர் எடுத்துக் கொண்டார். அதற்காக துக்கம் கொண்டாட வேண்டாம் என்று ஆண்டவர் கூறியபோது, அதற்கு கீழ்ப்படிந்தார். ஒரு சாதாராண மனிதனால் செய்ய முடியாத காரியத்தை செய்தார் எசேக்கியேல். இது அவருடைய வாழ்க்கையின் அர்ப்பணிப்பை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.



தேவனுக்கு தன்னையே காணிக்கையாக கொடுப்பதற்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அது மட்டுமல்லாமல், எருசலேமின் முற்றுகையை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்க அநேக நாட்கள் ஒருபக்கமாக ஒருக்களித்து, கயிறுகளால் கட்டப்பட்ட நிலையில் படுக்க வேண்டியதாயிற்று. அதையும் எதிர் பேசாமல் செய்து முடித்தார்.

அவரது ஊழியம், பாபிலோனின் தஞ்சம் புகுந்தவர்களுக்கு, அவர்கள் பாவங்களை உணர்த்துதல், அவர்களுக்கு வருங்காலத்தில் ஆண்டவர் அளிக்கக் காத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறி, அவர்களை உற்சாகப்படுத்துதல் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டதாயிருந்தது. தேவ சித்தத்தை முழுமையாக நிறைவேற்றி, தேவனுடைய மகிமையைக் காணும் பாக்கியத்தை பெற்ற எசேக்கியேலின் முழுமையான அர்ப்பணிப்பு நமக்கு ஒரு நல்ல மாதிரி.

நம் வாழ்க்கையிலும் கூட, நாம் பிறருக்கு உதவி செய்வதன் மூலமாகவோ, அதிகமாக காணிக்கை கொடுப்பதன் மூலமாகவோ தேவனைப் பிரியப்படுத்திவிட முடியாது. காணிக்கையைக் கண்டு மனம் மாற தேவன் ஒரு மனிதன் அல்ல. காணிக்கையைக் கொடுக்கும் நம் உள்ளத்தையே ஆண்டவர் முதலில் நோக்குகிறார். அது சுத்தமாய் இருந்தால் மட்டுமே அவர் நம்மோடு கூட நம் காணிக்கையையும் அங்கிகரிப்பார்.

ஆபேலையும் எசேக்கியேலையும் போல, நம்மை முழுமையாய் தேவனுக்கு அர்ப்பணித்து, அவருக்கு பிரியமாய் வாழ்வோம். அப்படி நம் வாழ்க்கை அமைந்தால் தான் நாம் கொடுக்கும் எந்த ஒரு காணிக்கையும், பிறருக்கு செய்யும் எந்த ஒரு உதவியும் தேவனால் அங்கிகரிக்கப்படும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### சாராள்
### (ஆதி. 12: 1-10, 18:1-15, 20, 21:1-14)

சாராள் ஆபிரகாமின் முதல் மனைவி. சாராளின் ஆதிப்பெயர் சாராய். சாராய் என்றால் ராணி, அரசி என்று பொருள். இவள் பெயர் ஆதி. 17:15 வரை சாராய் என்றும், அதன்பின் சாராள் என்றும் சொல்லப்படுகிறது. ராணி என்று அர்த்தங்கொள்ளும் சாராய் என்ற பெயர் 'ஜாதிகளின் ராணி' என்று அர்த்தம் கொள்ளும் சாராள் என்று மாற்றப்பட்டது. இவளை அழ்குள்ள ஸ்திரீ என்று வேதம் சொல்லுகிறது.

**சாராளிடம் காணப்பட்ட குணநலன்கள்:**

**1. சாராளின் விசுவாச வாழ்வு:**
தான் அறியாத தேசத்துக்குப் போக ஆபிரகாம் புறப்பட்டபோது, விசுவாசத்துடன் தன் வசதியான வாழ்க்கையை விட்டு, உற்றார் உறவினரை விட்டு, தெரியாத இடத்திற்கு ஆபிரகாமுடன் பின் தொடர்ந்தாள். முறுமுறுக்காமல் ஆபிரகாமுடன் பின் சென்றதுடன் ஆபிரகாமின் விசுவாச வாழ்விற்கு சாராள் உதவினாள்.

**2. சாராளின் விருந்தோம்பல்**
பகலிலுண்மையான வேளையில் சிறிது ஓய்வு எடுக்கும் நேரத்தில் வழிபோக்கரைக் கொண்டு வந்து மூன்று படி மாவினால் சீக்கிரமாய் அப்பம் சுட சாராளைக் கேட்டுக்கொண்டபோது முறுமுறுக்காமல் சந்தோஷத்துடன் செய்து உதவினாள்.

**3. சாராளின் கீழ்ப்படிதல்**
1பேதுரு 3:5,6-ல் பேதுரு சொல்கிறார்: "சாரள், ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்து தன்னை அலங்கரித்தாள்" என்று அவள் அவனை ஆண்டவன் என்றாள். இது அவள் பயபக்தியைக் காட்டுகிறது.

**4. சாராள் கடின உழைப்பாளி:**
முகம் கோணாமல் எத்தனை முறை வீடு மாற்றவும் அவள் சலித்துக் கொள்ளவில்லை. வேலைக்காரர்கள் இருந்தாலும் அவளுடைய ஈடுபாடும் அதில் உண்டு.

**சாராளுக்கு தேவன் எப்படிப்பட்டவராயிருந்தார்?**

**1. வாக்குப்பண்ணினதை நிறைவேற்றும் தேவன்**
25 வருடங்களுக்கு பிறகும், ஒரு குழந்தையைத் தருவேன் என்று தாம் வாக்குப் பண்ணினதை நிறைவேற்றினார்.

**2. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை**

செத்துப்போன கர்ப்பத்தையுடைய மலடியையும் பிள்ளைப் பெற செய்ய அவரால் கூடும்.

**3. மன்னிக்கும் தேவன்**

ஆபிரகாம், சாராளின் தவறுகளையும், உண்மையில்லாத சூழ்நிலைகளையும் தேவன் மன்னித்து அவர்கள் பலிகளை ஏற்றுக்கொண்டு இறுதிவரை அவர்களோடிருர்ந்தார்.

**4. உண்மையுள்ள தேவன்**

சாராளை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

சாராளின் கீழ்ப்படிதல், விசுவாச வாழ்வு, கடின உழைப்பு, விருந்தாளிகளை உபசரித்தல் போன்றுதான் நற்குணங்கள் நம்மிடம் காணப்பட ஜெபிப்போம். சாராளுக்கு தேவன் எப்படிப்பட்டவராக இருந்தாரோ, அதே போல் நம்மோடும் இருக்கிறார். அவர் சர்வ வல்லவர், உண்மையுள்ளவர் வாக்குப் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர். நம் தேவனால் எல்லாம் கூடும்.

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## டிசம்பர் மாத தலைப்பு

# மீட்பரின் வருகை

# [Advent of Redeemer]

Dear Children,

The theme this November is **"CHRISTIAN GIVING".**

The Bible teaches us that God wants us to give with a willing heart.



God calls us to give from our heart and not out of obligation, for God loves a cheerful giver (2 Corinthians 9:7).

God wants us to put giving at the top of our list and not just give what is leftover at the end of the month.




## HOW CAN WE BE MORE GIVING?

https://www.youtube.com/watch?v=EjIWvuFYrL4

## THE MAN WHO GAVE 90 PERCENT

R. G. Le Tourneau (1888 – 1969) was a Christian industrialist who dedicated his life to "being a businessman for God."



He was hugely successful, designing and developing his own line of earth-moving equipment.

As he succeeded financially, he increased his giving to the point where he was giving 90% of his income to the Lord's work. You may be thinking, "I could give 90% too if I was a multi-millionaire." Maybe so, but Le Tourneau didn't start out wealthy.

*I shovel out the money, and God shovels it back—but God has a bigger shovel.*
– R. G. Le Tourneau

**A GENTLE CHALLENGE:** Consider increasing your giving (whether money, time, or talents) beyond mere convenience, and into the realm of sacrifice.


## THE GREATEST STORY ON GIVING

The bible says - *"For God so loved the world that he gave his one and only Son, that whoever believes in him shall not perish but have eternal life"– John 3:16 NIV*


No story on GIVING would be complete without remembering how God gave His Beloved Son, Jesus to die on the cross for us.

**A GENTLE CHALLENGE**: Commit your life to the Lord – no strings attached.

## SAYING IT WITH PICTURES...




And they exceeded our expectations: They gave themselves first of all to the Lord, and then by the will of God also to us.
– 2 Corinthians 8:5 NIV




Dear children, let us not love with words or speech but with actions and in truth.
– 1 John 3:18 NIV


## TINY TOTS SECTION

### COLOR IN...




# Find It!

These friends are collecting toys to give to others so that they can have an even happier Christmas. Can you find the hidden objects?



## Jesus Taught About Giving Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the 10 things that are different.



# OLDER CHILDREN SECTION

### CHOOSE THE CORRECT OPTION – "Christian Giving" in the Bible.

1. Tabitha was a disciple living in Joppa. How was she described? (Acts 9:36)
a. She was full of good works.
b. She was a teacher of the right.
c. She was a defender of the faith.
d. She gave alms.

2. What did the Macedonian church do? (2 Corin. 8: 2- 4)
a. They gave donations to Lord's people
b. They hid Paul from the Jews.
c. They forsook all their idols.
d. They did not listen to heretics.

3. What did Paul tell the Corinthian church to do? (2 Corin. 8:7)
a. He told them to help the poor.
b. He told them to excel in giving.
c. They forsook all their idols.
d. They did not listen to heretics.

4. When Jesus fed 5000 people, how much did each person eat? (John 6:11)
a. A piece of bread and a slice of fish
b. Just enough not to starve
c. As much as they wanted
d. ¼ of a fish and a slice of bread

5. How much money did the widow give in the temple? (Lk. 21:2)
a. 1 Mite
b. 2 Mites
c. 3 Mites
d. 4 Mites

6. What did Jesus say to his disciples about the widow's offering? (Lk. 21:3)
a. She gave more than the rich.
b. She could give more.
c. She gave too little.
d. She kept some for herself.

7. What lesson can we learn from the widow's offering?
a. God is our helper.
b. God does not want small offering
c. The widow offering is not accepted
d. God sees our sacrifice.

8. How much did Zacchaeus say he would give to the poor? (Lk. 19:8)
a. 1/2
b. 1/3
c. 1/5 th
d. 1/10 th


9. " if I (Zacchaeus) have cheated anybody..., I will pay back ____." (Lk. 19:8)
a. 2 times the amount
b. 4 times the amount
c. 5 times the amount
d. 10 times the amount

10. For what did Paul commend the Philippian church? (Phil. 4:14-16)
a. They held fast the name of Jesus.
b. They obeyed the epistles.
c. They gave aid more than once
d. The parable of the mustard seed

11. According to 2 Corinthians 9: 7, God loves who?
a. The sacrifice of praise.
b. The gathering of the saints.
c. The people of faith.
d. A cheerful giver.

12. He who sows generously, will reap ______________ (2 Corin. 9: 6)
a. Generously
b. the Kingdom of God
c. Salvation
d. Sparingly

## WE GIVE BECAUSE HE FIRST GAVE...



## THE BIBLE HAS A LOT TO SAY ABOUT GIVING.

### Be a Cheerful Giver – Fill in the Blanks – ESV Scripture Verses

**generosity - joy - blessing**

**2 Corinthians 9:7** Each one must _______ as he has decided in his ________, not reluctantly or under compulsion, for God ________ a __________ giver.

**Luke 6:38** _______ and it shall be _______ to you. ________ measure, pressed down, shaken together, ________ _______, will be put into your lap. For with the __________you use it will be _______________ back to you.

**Proverbs 3:27** Do not _________ ______from those to whom it is ______, when it is in your __________ to do it.

**2 Corinthians 9:6** The ________is this: whoever _____ ___________ will also _____ ___________, and whoever sows ____________ will also reap ______________.

**Matthew 6:3-4** But when you ______ to the ________, do not let your ______ hand know what your ______ hand is doing, so that your ________may be in ________. And your _________who sees in ________ will _________ you.

**Matthew 19:21** Jesus said to him, "If you would be _______, go, _____ what you ________ and ______ to the ______, and you will have ________ in __________; and come, follow me."

**2 Corinthians 9:8** And God is ______ to make all grace abound to you, so that having all __________ in all things at ____times, you may ________ in every _______work.

**Proverbs 3:9** ________ the Lord with your _______ and with the firstfruits of all your produce.

**Proverbs 11:25** Whoever brings _________will be _________, and one who waters will himself be _________.

**Matthew 5:42** ______ to the one who ______from you, and do not _______ the one who would ________ from you.

**SPOT 10 DIFFERENCES BETWEEN THE 2 PICTURES BELOW.**
**The money you give is used in church ministry**




## GIVE YOUR SPIRITUAL GIFTS, IN SERVICE TO GOD

# What Are YOUR Spiritual Gifts?

*Heavenly Father gives everyone spiritual gifts. What are some of yours?*



Do you know someone who's really good at showing love? Or someone who has a lot of faith in Jesus Christ? These are two examples of spiritual gifts, and there are many more. In the scriptures, we learn that everyone has at least one!

You might not know what your spiritual gifts are yet. But you can start looking for clues.

Color in the checkbox by the gifts you think you might have. (You can also talk to a parent about what gifts they notice in you.) If one of your gifts isn't here, add it to the list!

- ☐ Having faith in Jesus Christ
- ☐ Having faith to be healed
- ☐ Listening to the Holy Ghost
- ☐ Learning languages
- ☐ Teaching the gospel
- ☐ Being wise
- ☐ Recognizing what is right and what is wrong
- ☐ Gaining knowledge
- ☐ Believing others' testimonies
- ☐ Noticing if someone needs a friend
- ☐ Showing love
- ☐ Understanding the scriptures
- ☐ Keeping a journal
- ☐ Being a loyal friend
- ☐ Being kind
- ☐ ____________
- ☐ ____________
- ☐ ____________

"There are many GIFTS, and to EVERY [PERSON] is given a gift by the SPIRIT OF GOD.



REMEMBER THAT EVERY GOOD GIFT COMETH OF CHRIST.

**BONUS CHALLENGE!**

Write about a time when you used one of your gifts to help someone.

## ENRICHED, NOT IMPOVERISHED.



In the latter part of the 17th century, German preacher August H. Francke founded an orphanage to care for the homeless children of Halle.

One day a destitute Christian widow came to his door begging for a ducat--a gold coin. Because of his financial situation, he politely but regretfully told her he couldn't help her.

Disheartened, the woman began to weep. Moved by her tears, Francke asked her to wait while he went to his room to pray. After seeking God's guidance, he felt that the Holy Spirit wanted him to change his mind. So, trusting the Lord to meet his own needs, he gave her the money.

Two mornings later, he received a letter of thanks from the widow. She explained that because of his generosity she had asked the Lord to shower the orphanage with gifts.

That same day Francke received 12 ducats from a wealthy lady and 2 more from a friend in Sweden. He thought he had been amply rewarded for helping the widow, but he was soon informed that the orphanage was to receive 500 gold pieces from the estate of Prince Lodewyk Van Wurtenburg. When he heard this, Francke wept in gratitude. In sacrificially providing for that needy widow, he had been enriched, not impoverished.

**Listen to the Holy Spirit's prompting today!**

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

The theme for the month of November is: ____________________________.

1. According to 2 Corinthians 9:7 – God loves _____________________________.
2. According to John 3:16, what did God give? ____________________________.
3. How much in total did the German preacher August H. Francke receive from the Lord, for the 1 ducat that he gave to the widow? ________.
4. Name one thing that you could give to the Lord __________________________.

Children, everything we have comes from the Lord. Remember, he who gives generously, reaps generously… he who gives sparingly, reaps sparingly.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan.**

## Answers to October Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – TEACHINGS and PARABLES OF JESUS

1. a. Matthew 5:1 to 7:29
2. d. Poor in Spirit
3. d. Peacemakers
4. b. fulfill
5. a. Salt
6. d. In heaven
7. a. Heart
8. d. God's Word
9. a. Kingdom of Heaven
10. a. The parable of the Prodigal son
11. c. The parable of the Good Samaritan
12. a. Heavenly Father

## Short Review Below...

1. The theme for the month of October is: **Jesus is the Best Teacher.**
2. Why was Jesus a great Teacher? i. **He loved People**

   ii. **He knew how to make things intesresting**

   iii. **He made use of every opportunity to teach.**

   iv. **He spoke what he learnt from His Father.**
3. When Jesus finished talking, what did the people think? **They were Amazed**.
4. John 13:13 says - **"You call me Teacher and Lord, and rightly so, for that is what I am"**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

## எண்ணாகமம் முழுவதும்

*(அனைத்து கேள்விகளுக்கும் சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)*

1. எத்தனை ஆண்டுகள் லேவியர்கள் திருப்பணி செய்ய வேண்டும் ?

2 . மோசேயின் மைத்துனர் யார் ?

3 . கூடாரத்துக்கு செல்லாமல் பாளையத்திலே தீர்க்கதரிசனம் உரைத்த இருவர் யார் ?

4. தேசத்தை சுற்றிப் பார்த்த ஜனங்கள் எப்படியிருந்தோம் என்று சொன்னார்கள்?

5. மலையின் உச்சியில் ஏறத் துணிந்தது யார் ?

6. எந்த பள்ளத்தாக்கில் ஒரே குலையுள்ள ஒரு திராட்சை கொடியை அறுத்தார்கள் ?

7. மிரியாம் சேர்த்துக் கொள்ளப்படும் மட்டும் பிரயாணம் பண்ணாதிருந்தது யார்?

8 . மெராரியின் வம்சத் தலைவன் யார் ?

9. எட்டாம் நாளிலே காணிக்கை செலுத்தின பிரபு யார் ?

10. தான் வம்சத்துக்குச் சேனாதிபதி யார் ?

11. சபைக்கு தலைவர்கள்,சங்கத்துக்கு பிரபலமானவர்கள் யார்?

12.கொடுமுடி இரண்டு எது?

13.மேடுகளிலிருந்து பிலேயாம் எதைப் பார்த்தான்?

14.கழுதை எங்கு போய் ஒதுங்கியது?

15. 43730 குறிப்பது எது?

16.ஊழியக்காரருக்கு போதித்த தீர்க்கதரிசி யார் ?

17.மோசேயின் தாத்தா பெயர் என்ன?

18.பாகால் பேயோரை பின்பற்ற காரணமாயிருந்தது யார்?

19.  52700 குறிப்பது எது?

20.  ள் - எழுத்தில் முடியும் பெயரையுடைய ஐந்து சகோதரிகள் யார் யார் ?

குறிப்பு :

- ***அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டும்.***
- ***அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.***

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் லேவியராகமம் |
|---|---|---|
| 1 | ஏழு நாட்கள் | 8:33 |
| 2 | ஊசியேல் | 10:4 |
| 3 | பிரமியம் உள்ளவன் | 15:9 |
| 4 | குருவியின் இரத்தம் | 14:7 |
| 5 | சுத்தமுள்ளவன் | 13:13 |
| 6 | விதைத்தானியம் | 11:37 |
| 7 | வீட்டை அரிக்கிற குஷ்டம் | 14:44 |
| 8 | மாடு, ஆடு, வெள்ளாடு | 7:23 |
| 9 | சர்வாங்க தகனபலி | 6:9 |
| 10 | முதற்கனிகளை | 2:12 |
| 11 | சகோதரன் | 25:39,40 |
| 12 | நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பதற்கு. | 19:15 |
| 13 | கட்டளைகளும் நியாயங்களும் | 26:46 |
| 14 | அப்பம் என்னும் ஆதரவுகோல் | 26:26 |
| 15 | பணத்தை வட்டிக்கும் தானியத்தைப் பொலிசைக்கும் | 25:37 |
| 16 | ஒரு கலம் வாற்கோதுமை விதைக்கிற வயல் | 27:26 |
| 17 | ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் | 4:4 |
| 18 | வல்லமையின் பெருமைக்கு | 26:19 |
| 19 | இஸ்ரவேலர் | 26:3,8 |
| 20 | வடபுறத்தில் | 1:11 |

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs .Priya Ranjith Kumar
2. Mrs .Helen Sharmila Ray
3. Mrs.Sheeba Herlin
4. Mrs. D.R Ajita Ebi
5. Mrs. Subija Jino
6. Mr. Jeba Jino
7. Mr.Emmanuel
8. Mr.Salin Robert
9. Mr.Ashok . s
10. Mr. Prawin Durai Sam
11. Mrs. Abisha Grace Rejin
12. Mrs.Annie max
13. Mrs. Febell Jeevagi Thomas
14. Mrs . Sharmila Rajesh
15. Mrs.Jebaseeli Asir
16. Mrs.Geetha kannan
17. Mrs.L. Jenila
18. Mrs. G. Sheeba Merlin

## Children who answered October - 2023 Quiz

1. Liana Erin
2. Giana Elin
3. Kevin Immanuel
4. Kavi Yalini
5. Karen Tryphena Grapeson
6. Johan Anit Manuel
7. Johan Sam Manuel
8. Linuel I.J Sherwyn
9. Leonel I.J.Stalin
10. Johanan paul
11. Joanna Paul
12. Starlyng Noble
13. Isaac
14. Jeya Joshua Mahear
15. Jerilyn Pushpam Nelson
16. Gabrilyn Hannah Nelson
17. Jehosheba
18. Joanna Irene
19. Jevlyn Ana .V
20. Camryn Robert. S
21. Galvin Robert .S
22. Jen Scudd
23. Jim Scott
24. Leona Juliet J.B
25. Adelyn Victoria Jeyaseelan
26. Aadhov Steve Matthew
27. Janessa Max
28. Johan
29. Janey Jessìca
30. Hadriel Adventier
31. Josiah
32. Liam Elijah
33. Evelyn Gracia
34. Steffi Priscilla

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



**இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி**

**14-06-1912 – 20-01-1997**

**பெரேயா**

திருநெல்வேலி மண்டலத்தில் VBS விறுவிறுப்பாய் மலர்ந்து கொண்ட காலம் அது. மார்கன் அம்மையாரோடு இணைந்த பாக்கித்தாயும், லீலாவும் VBS ஊழியத்தோடு இதர ஊழியங்களிலும் இணைந்து தேவனை மகிமைப்படுத்துவதில் அகமகிழ்ந்தனர். ஈடித் மார்கனுக்கோ பல்வேறு இடங்களில் நடத்தப்படும் VBS-ல் ஆசிரியராக இணைந்து பணிசெய்யும் ஆலய விசுவாசிகளைக் குறித்த பாரம் அதிகரித்தது. மூன்று பேராய் VBS பணித்தளங்களை நேரில் மேற்பார்வை செய்தபோதிலும் பிற ஆசிரியர்களையும், பொறுப்பாளர்களையும் முறையாகப் பயிற்றுவிக்க வேண்டுமென உணர்ந்தார் ஈடித். "மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" (2 தீமோ. 2:2) என்ற வசனம் ஈடித்தை இன்னுமாய் தெளிவுபடுத்தவே பயிற்சியாளர் பாசறையைப்பற்றி திட்டமிட்டனர் VBS மங்கையர்.

ஆண்டவர் நடத்துதலோடு, அத்தியாட்சாதீன ஆதரவோடு 1957-ம் ஆண்டு VBS பயிற்சி முகாமை நடத்தினர். VBS ஊழியர்கள், முப்பது இடங்களில் VBS நடத்த முன்வந்த முப்பது பெண்கள் இம்முகாமிற்கு முன்பதிவு செய்தனர். பெண்களைப் பொத்திப் பாதுகாக்கும் திருநெல்வேலிப் பகுதியில் தெய்வப் பணிக்காகத் தங்கள் வீட்டு பெண்மக்களைப் பெற்றோர் மனமுவந்து அனுப்பினது ஆச்சரியமானதுமட்டுமல்ல, தெய்வ வழிநடத்துதலில் உறுதிப்பாடாகவும் திகழ்ந்தது. மனுஷர் தயவில் வளர்ந்த

(லூக்கா 2:52) நாதர் இயேசு, இவ்விதம் ஈடித்திற்கும் தேவதயவோடு மனுஷர் தயவையும் கட்டளையிட்டார்.

ஊழியம் வளர்ந்து வந்ததால் தங்களுக்கென்று ஒரு தனி இடம் அவசியம் என்பதை உணர்ந்தனர். தங்கள் தேவையைத் தேவனுக்குத் தெரியப்படுத்தி விசுவாசத்தோடு காத்திருந்தனர். ஊசிக் கோபுரம் அருகில் வாய்க்கால் ஓரமாக ஒரு சிறுவீடு வாடகைக்குக் கிடைத்தது. இந்த VBS மங்கையருக்கு, மகிழ்வோடு குடியேறினர். கிறிஸ்துவை நேசிப்போருக்கு ஜெபமும் வேதவாசிப்பு அதிமுக்கிய அன்றாடப் பழக்கமல்லவா? ஈடித், பாக்கித்தாய், லீலா குடியேறிய அந்த வீட்டிலும் இவ்விரண்டும் முக்கிய அம்சங்களாகத் திகழ்ந்தன. வேத புத்தகம் சொல்லும் பெரேயா மக்கள் போல இம்மூவரும் வேதத்தை விரும்பிப் படிப்பதிலும், வசனத்தையே கற்றுக் கொடுக்கும் வாஞ்சையில் வளர்ந்ததாலும் தங்கள் சிறுகுடிலுக்கு 'பெரேயா' என்று பெயர் சூட்டினர் ( இன்றும் பாளையங்கோட்டையிலே, 6-லங்கர்கானா தெருவிலுள்ள VBS தலைமயகத்தின் பெயர் 'பெரேயா' தான்). பாடலும், வேதபாட வகுப்புகளுமாய் அமைதியான ஆரவாரத்தோடு அந்தப் பகுதியில் பெரேயா களைகட்டியது.

ஊழியத் தலங்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, எட்டவேண்டிய தூரமும் அதிகமாகவே தங்களிடம் இருந்த ஸ்டான்டர்ட் காரை விற்றுவிட்டு ஒரு ஃபோக்ஸ்வாகன் காரை வாங்கினார். ஈடித்தின் வார்த்தையில், "அதிசய கர்த்தாவுக்கு எங்களுக்கு அற்புதம் செய்வதில் அதிக அக்கறை. வண்டியை வாங்கின விலையை விட விற்றவிலை அதிகமாகும்படி கார்களின் விலைவாசிக்கே ஏற்றம் கொடுத்துவிட்டார்" என்று பதிக்கப்பட்டுள்ளது. இந்த சாட்சி, "அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்" (ஏசாயா 28:29) என்ற வசனத்தின் நினைப்பூட்டலாய் அமைந்தது.

பெரிய காரில் நெடும் பயணங்கள் தொடங்கின. படங்களடங்கிய பெரிய தகரப் பெட்டிகளையும், சிறுவர்களைக் கவர்ந்திழுக்கும் பப்பெட்டுகளையும் (Puppets) ஏற்றிக்கொண்டு ஈடித், பாக்கித்தாய், லீலா உற்சாகமாய்ப் பயணித்தனர். தங்கள் ஊழிய மையங்களுக்கு, பெரேயா குடும்ப மக்களோடு VBS ஊழியத்தில் பங்குபெறும் நண்பர்கள், VBS சகோதரிகள் பயண ஆயத்தங்கள் தொடங்கி, உடன் பயணிப்பது, பணித்தளங்களிலுள்ள தங்கள் வீடுகளில் VBS சகோதரிகளைத் தங்கச்செய்து உபசரிப்பது, இப்படிப்பட்ட பங்குகளை நிறைவேற்றி, நெல்லை விடுமுறை வேதாகமப்பள்ளியின் இரண்டாம் கட்ட பணிவரிசையில் இடைந்து மகிழ்ந்தனர்.

**- தொடரும்**

## பாடல் பிறந்த கதை

***இயேசு எந்தன் நேசரே [பாமாலை 238]***
***(Jesus loves me this I know)***



***இயேசு எந்தன் நேசரே***
***கண்டேன் வேத நூலிலே***
***பாலர் அவர் சொந்தந்தான்,***
***தாங்க அவர் வல்லோர்தான்.***

***இயேசு என் நேசர்,***
***இயேசு என் நேசர்,***
***இயேசு என் நேசர்,***
***மெய் வேத வாக்கிதே.***

***என்னை மீட்க மரித்தார்,***
***மோட்ச வாசல் திறந்தார்,***
***எந்தன் பாவம் நீக்குவார்,***
***பாலன் என்னை ரட்சிப்பார்.***

*சிறுவர்களை இயேசுவின் அன்பை நோக்கி இழுத்த பாடல்களில் இப்பாடல் மிகவும் சிறப்புப் பெற்றது. இப்பாடலை அன்னா பார்ட்லெட் வார்னர்* (Anna Bartlett Warner) 1860*ம் ஆண்டு, தன்* 40*வது வயதில் எழுதினார்.*

*அன்னாவின் சகோதரி சூசன்* (Susan Warner) *ஒரு சிறந்த எழுத்தாளர். அந்நாட்களில் மிகவும் புகழ்பெற்ற 'சொல்லி முத்திரையிடு'* (Say and Seal) *என்ற நாவல் புத்தகத்தை அவர் எழுதினார். அதின் கதாபாத்திரங்களான லிண்டன், மரணத்துடன் போராடும் சிறுவன் ஜானி பாக்ஸை ஆறுதல்படுத்த இப்பாடலைப் பாடுவதாக சூசன் எழுதி, அப்பாடலை இயற்றும் பொறுப்பைத் தன் சகோதரியிடம் கொடுத்தார். இவ்வாறு உருவான இப்பாடல், இன்றும் உலகின் பல்வேறு சிறுவர்களை உற்சாகப்படுத்தும் பாடலாக விளங்குகிறது.*

*கல்வியில் சிறந்த வார்னர் சகோதரிகள் பக்தி நிறைந்த வாழ்க்கை நடத்தி வந்தனர். சிறந்த வழக்கறிஞரான இவர்கள் தந்தையின் மரணத்திற்குப்பின், தங்களது இலக்கியப் பணிகளின் மூலம் சமூக சேவையையும் நற்செய்திப்பணியையும் செய்து வந்தனர். நியூயார்க்கின் ஹட்சன் நதிக்கரையில் இருந்த இவர்களின் இல்லத்துக்கருகில் அமைக்கப்பட்ட அமெரிக்க படை அதிகாரிகளின் பயிற்சிப்பள்ளியில் படிக்கும் வாலிப*

வீரர்களுக்குத் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஞாயிறு பள்ளி நடத்தி, அவர்களின் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்து வந்தார்கள்.

எளிமையான வார்த்தைகளுடன் இயேசுவின் அன்பைத் தெளிவாய் விளக்கும் இப்பாடலை, பல மிஷனரிகள் தங்கள் பணித்தளங்களின் புது விசுவாசிகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் முதல் பாடலாக உபயோகித்தனர். எனவே, இப்பாடல் உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இப்பாடலுக்கு டாக்டர் வில்லியம் பிராட்பரி (William Batchelder Bradbury) இனிமையான ராகம் அமைத்து அதின் பல்லவியையும் (Chorus) (Yes, Jesus loves me, Yes, Jesus Loves me) 1861ம் ஆண்டு சேர்த்தார். பல பாடல் புத்தகங்களை வெளியிட்டுள்ள இவர், இப்பாடலை, 1862ம் ஆண்டு தனது 'தங்க மழை' என்ற பாடல் புத்தகத்தில் அறிமுகம் செய்தார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஒரேவித சீருடை அணிந்து, இணைந்து அழகாகப் பாடும் இன்னிசை நிகழ்ச்சிகளை வருடந்தோறும் நடத்திய பெருமை இவரைச் சேரும்.

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**




# ஆலய பக்கம்

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் நவம்பர் – 2023


| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 3 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's Church |
| 5 | ஞாயிறு | 11.00 am - 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை - ஆயர் இல்லம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 7 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 10 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | சிறுவர் ஆராதனை – St.Andrew's church |
| 11 | சனி | 3.30 pm – 10.00 pm | தோத்திரப் பண்டிகை ஆராதனை & ஏல விற்பனை - Marthoma Church - Musaffah |
| 12 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 14 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 17 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 19 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 21 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 24 | வெள்ளி | 6.30 pm – 8.30pm | Junior Church |
| | | 8.45 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 26 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 28 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | வியாழன் | 11.45pm | மாத இறுதி ஜெபம் - ஆயர் இல்லம் |

# BIBLE READING FOR CHILDREN – NOVEMBER 2023




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.11.22 | Acts | 8 : 20 - 24 |
| 2.11.22 | Acts | 8 : 25 - 30 |
| 3.11.22 | Acts | 8 : 31 - 35 |
| 4.11.22 | Acts | 8 : 36 - 40 |
| 5.11.22 | Acts | 9 : 1 - 5 |
| 6.11.22 | Acts | 9 : 6 - 10 |
| 7.11.22 | Acts | 9 : 11 - 16 |
| 8.11.22 | Acts | 9 : 17 - 21 |
| 9.11.22 | Acts | 9 : 22 - 27 |
| 10.11.22 | Acts | 9 : 28 -34 |
| 11.11.22 | Acts | 9 : 35- 39 |
| 12.11.22 | Acts | 9 : 41- 43 |
| 13.11.22 | Acts | 10 : 1 - 6 |
| 14.11.22 | Acts | 10 : 7 -12 |
| 15.11.22 | Acts | 10 : 13 - 20 |
| 16.11.22 | Acts | 10 : 21 - 24 |
| 17.11.22 | Acts | 10 : 25 - 32 |
| 18.11.22 | Acts | 10 : 33 - 40 |
| 19.11.22 | Acts | 10 : 41 - 48 |
| 20.11.22 | Acts | 11 : 1 - 6 |
| 21.11.22 | Acts | 11 : 7 - 12 |
| 22.11.22 | Acts | 11 : 13 - 17 |
| 23.11.22 | Acts | 11 : 18 - 23 |
| 24.11.22 | Acts | 11 : 24 - 30 |
| 25.11.22 | Acts | 12 : 1 - 6 |
| 26.11.22 | Acts | 12 : 7 - 11 |
| 27.11.22 | Acts | 12 : 12 - 19 |
| 28.11.22 | Acts | 12 : 20 - 24 |
| 29.11.22 | Acts | 13 : 1 - 7 |
| 30.11.22 | Acts | 13 : 8 - 15 |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - நவம்பர் 2023




| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | புதன் | உபாகமம் 17 : 1-10 | ரோமர் 1 : 1 - 15 |
| 2 | வியாழன் | உபாகமம் 17 : 11 -20 | ரோமர் 1 : 16 -32 |
| 3 | வெள்ளி | உபாகமம் 18: 1 -11 | ரோமர் 2 : 1 - 15 |
| 4 | சனி | உபாகமம் 18: 12 -22 | ரோமர் 2 : 16 - 29 |
| 5 | ஞாயிறு | உபாகமம் 19 : 1 - 10 | ரோமர் 3 : 1 - 19 |
| 6 | திங்கள் | உபாகமம் 19 : 11 -21 | ரோமர் 3 : 20 - 31 |
| 7 | செவ்வாய் | உபாகமம் 20 : 1 -20 | ரோமர் 4 : 1 -13 |
| 8 | புதன் | உபாகமம் 21 : 1 - 9 | ரோமர் 4 : 14 - 25 |
| 9 | வியாழன் | உபாகமம் 21 : 10 -23 | ரோமர் 5 : 1 - 11 |
| 10 | வெள்ளி | உபாகமம் 22 : 1- 15 | ரோமர் 5 : 12 - 21 |
| 11 | சனி | உபாகமம் 22 : 16 - 30 | ரோமர் 6 : 1 - 13 |
| 12 | ஞாயிறு | உபாகமம் 23 : 1 -14 | ரோமர் 6 : 14 - 23 |
| 13 | திங்கள் | உபாகமம் 23 : 15 - 25 | ரோமர் 7 : 1 - 12 |
| 14 | செவ்வாய் | உபாகமம் 24 : 1 -13 | ரோமர் 7 : 13 - 25 |
| 15 | புதன் | உபாகமம் 24 : 14 -22 | ரோமர் 8 : 1 - 15 |
| 16 | வியாழன் | உபாகமம் 25 : 1 - 19 | ரோமர் 8 : 1 6 - 27 |
| 17 | வெள்ளி | உபாகமம் 26 : 1 - 19 | ரோமர் 8 : 28 -39 |
| 18 | சனி | உபாகமம் 27: 1 - 15 | ரோமர் 9 : 1 - 17 |
| 19 | ஞாயிறு | உபாகமம் 27 : 16 -26 | ரோமர் 9 : 18 - 33 |
| 20 | திங்கள் | உபாகமம் 28 : 1 - 14 | ரோமர் 10 : 1 - 21 |
| 21 | செவ்வாய் | உபாகமம் 29 : 1 - 16 | ரோமர் 11 : 1 - 20 |
| 22 | புதன் | உபாகமம் 29 : 17 - 29 | ரோமர் 11 : 21 -36 |
| 23 | வியாழன் | உபாகமம் 30 : 1 - 10 | ரோமர் 12 : 1 - 21 |
| 24 | வெள்ளி | உபாகமம் 30 : 11 - 20 | ரோமர் 13 : 1 - 14 |
| 25 | சனி | உபாகமம் 31 : 1 - 15 | ரோமர் 14 : 1 - 11 |
| 26 | ஞாயிறு | உபாகமம் 31 : 16 - 30 | ரோமர் 14 : 12 - 23 |
| 27 | திங்கள் | உபாகமம் 32 : 1 -14 | ரோமர் 15 : 1 - 16 |
| 28 | செவ்வாய் | உபாகமம் 32 : 15 - 41 | ரோமர் 15 : 17 - 23 |
| 29 | புதன் | உபாகமம் 32 : 42 - 52 | ரோமர் 16 : 1 - 16 |
| 30 | வியாழன் | உபாகமம் 33 : 1 - 21 | ரோமர் 16 : 17 - 27 |

# ஆராதனை பாடல்கள் - நவம்பர் 2023



| | |
|---|---|
| **03-11-23** | |
| பாமாலை - 170 | ஆ சகோதரர் ஒன்றாய் |
| பாமாலை - 361 | ஒப்பில்லாத திவ்ய அன்பே |
| கீர்த்தனை – 217 | அன்பே பிரதானம் |
| கீர்த்தனை – 77 | சீர் இயேசு நாதனுக்கு ஜெய |
| **10-11-23** | |
| பாமாலை - 239 | இயேசு கற்பித்தார் |
| பாமாலை - 238 | இயேசு எந்தன் நேசரே |
| கீர்த்தனை – 268 | பாலர் ஞாயிறிது |
| | பூவின் நறுகந்தம் வீசும் |
| **11-11-23 – தோத்திரப் பண்டிகை** | |
| பாமாலை - 387 | ஆ என்னில் நூறு வாயும் |
| பாமாலை - 386 | சர்வத்தையும் அன்பாய் |
| கீர்த்தனை – 237 | தந்தானைத் துதிப்போமே |
| | சத்ய வேதமான விதை |
| **17-11-23** | |
| பாமாலை - 2 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை - 319 | உன் நெஞ்சிலே உண்டான |
| கீர்த்தனை – 208 | ஏற்றுக்கொண்டருளுமே தேவா |
| பாமாலை – 33 (1&2) | இந்நாள் வரைக்கும் கர்த்தரே |
| **24-11-23** | |
| பாமாலை - 24 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை - 237 | இயேசு எந்தன் மேய்ப்பர் |
| கீர்த்தனை – 352 | மனம் இசைந்து அனைவரும் |
| பாமாலை – 261 (1&2) | எல்லாருக்கும் மா உன்னதர் |

## திருமறை பாட ஒழுங்குகள் - நவம்பர் 2023

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-11-23 | ஒன்றுபட்ட வாழ்வு | எசேக். 37:15 – 23 | 1 கொரி. 3:9–17 | யோவான் 15:1-14 | - |
| 10-11-23 | குழந்தைகள் மீது கரிசனை | உபாகமம் 6 : 1 - 13 | எபேசியர் 6: 1 - 13 | மாற்கு 9:30-42 | 106:1-12 |
| 11-11-23 | கிறிஸ்தவ ஈகை | யாத். 35:1 -10 | 2 கொரி. 9 : 6 - 15 | மத்தேயு 6 : 24-34 | - |
| 17-11-23 | உணர்வுள்ள இருதயம் | ஆதி. 32 : 1 - 10 | அப். 8:26-40 | லூக்கா 19 :1 - 10 | - |
| 24-11-23 | ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தம் | ஓசியா 10:12 - 15 | கொலோ. 4 :1 - 6 | மத்தேயு 25:1-13 | 37:1-16 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 07-11-23 | சங்கீதம் | 113 | Al Wadha |
| 14-11-23 | சங்கீதம் | 114 | Hamdan |
| 21-11-23 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 28-11-23 | சங்கீதம் | 115 | Muroor |

# BIRTHDAY - NOVEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Manuel Sarah Foulkes Moore |
| 1 | Mr. | David Paulraj. S |
| 1 | Master. | Alden Benny Matteo |
| 1 | Mr. | Vivin Alfred |
| 1 | Mrs. | Shekin Gunavathy Jhannah |
| 1 | Mrs. | Vithya Selvi |
| 1 | Mr. | Ansel Regi |
| 4 | Mr. | Rajan Sagariya Nadar |
| 5 | Mr. | Prince Samuel |
| 5 | Ms | J. D. Hebinyakkisher |
| 9 | Mrs. | Jafnie Jebin |
| 9 | Mr. | Samuel Jackson Rajan |
| 9 | Mrs. | Dyana Stefy Sundar Lal |
| 10 | Mrs. | Merlin Jeba Kins |
| 12 | Ms. | Janessa. M |
| 13 | Mrs. | Shoba Denshi Bai |
| 14 | Mrs. | Neroline Jessy |
| 14 | Mr. | Arun Jeya Singh |
| 14 | Mr. | Jaya Chandraraja |
| 14 | Mrs. | Rachel John |
| 14 | Mrs. | Jenifa Jayasingh |
| 14 | Mrs. | P. Michael Rani Stalin |
| 17 | Mr. | Johanspher V |
| 17 | Baby. | Evelyn Loria. V |
| 17 | Ms. | Jerusha Raja |
| 18 | Mrs. | Vijila Rani |
| 20 | Mrs. | Deepa. C.P |
| 20 | Mrs. | Josephin C |
| 21 | Miss | Binulin Wafiga W S |
| 23 | Master. | Joshua Prince |
| 23 | Mr. | Immanuel Stanly |
| 23 | Miss | Dafina Dinesh |
| 24 | Dr. Mrs. | Ashibha Issac Eban |
| 26 | Ms. | Joanna Irene Johnson |
| 26 | Master. | Sam Sundar |
| 27 | Ms. | Angelin Monica Arun |
| 27 | Mrs. | Sasirekha Rajan |
| 28 | Mr. | Prem Stalin Russalaian |
| 29 | Baby | K. M. Alton Kim |
| 29 | Mr. | Arulanandham Pous M |

## WEDDING ANNIVERSARY - NOVEMBER




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 8 | Dr. & Mrs. | Benny Samuel. S |
| 11 | Mr. & Mrs. | Wilfred Sumad San K |
| 15 | Mr. & Mrs. | Gnanaraj Murugesan |
| 18 | Mr. & Mrs. | Danial Abraham |
| 21 | Mr. & Mrs. | Nithiya Kirubakaran. T |
| 24 | Mr. & Mrs. | Allen Joshua V |
| 30 | Mr. & Mrs. | Vijay Ananth D |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| **1** | Stephenson | 465 |
| **2** | Jeyakumar | 466 |
| **3** | Jegan Mahesh | 467 |

## NEW ARRIVAL



இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Luke Jairus | Mr. Godwin Mohan & Mrs. Lincy Jebarani |



**Church Day & Choir Day**











Farewell to Mr. Reynold Daniel & Family



Farewell to Mr. Jackson & Family


The Fruits
of Labor
Thanks
GIVING